முருகப்பெருமான் துணை

**மகான் திருமழிசை ஆழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.09.2023**, சனிக்கிழமை

1. ஆறுமுகனார் ஞான வடிவான
அவதார அரங்க ஞானியே
மாறுதலை கலியினில் படைக்க
மனுதர்மம் காத்து வழிநடத்த
2. வழிநடத்த வள்ளலாய் வந்த
வரம் மிகுந்த வாழும் ஞானியே
அழியாமை தரும் மகா சக்தியே
அரங்கனே உன் பெருமை கூறி
3. கூறியே சோபகிருது வேங்கைதிங்கள்
குறைவிலா மூவேழீர் திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 23 ம் நாள், 09.09.2023, சனிக்கிழமை)
அறிவுரை ஆசிதனை திருமழிசை ஆழ்வாரும்
அருளுவேன் அரங்கன் பலம் உலகறிய
4. அறிவிற் தெளிவு திடம்கூடி
ஆக்கம் தனை உலகோர் அடைய
அறிவுத் தெளிவு ஞானம் தரும்
அரங்கமகான் சன்மார்க்கமே
5. சன்மார்க்கமே சகலவழி தேற்றும்
சற்குருவின் உயர் மார்க்கமாகும்
நன்மை கருதி கலியுகமக்கள்
நம்பிக்கை வைத்து அரங்கன் வழிவர
6. வருகவே அனைவருக்கும் தெளிவு
வரமான அரங்கன் வழிகிட்டி
தரும ஞான சக்தி பலமும்
தானாகவே பெருகி நின்று

7. நின்றுமே இன பேதமிலா
நிலவுலகப் பாகுபாடு இல்லா
என்றும் எல்லாம் சமம்
எவ்வுயிரும் தன்னுயிர் போல் கருதி

8. கருதி தயவாக வாழுகின்ற
கடைத்தேற்றும் வழிவகையும்
குருவருளாகத் தொடரத் தேறி
குறைவிலா அரங்கன் மார்க்கம்

9. மார்க்கம் வழி சகலரும் தேறி
மரணம் மறுமை கடக்கின்ற
மார்க்க வாதிகளாகத் தேறி
மண்ணுலகச் செயல்பாடுகளை

10. செயல்பாடுகளை தீர்வுசெய்யும்
சிறந்த தலைமைதனை படைக்கும்
நேயம் மிக்கவர்களாக நீதிமான்களாக
நிலவுலகில் மக்கள் ஆற்றல் கூடி

11. கூடியே ஞான ஆட்சிதனை
குவலயம் சிறக்க படைப்பர்
நாடிட அரங்கனால் சகலதும்
நன்மையாகவே சடுதி நடக்கும்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—